10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 அதிர்வு 20 ஞாயிற்றுக்கிழமை 20 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## நன்றி சொன்ன முதலமைச்சர்



யாழ்ப்பாணம், மே 20

மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஒன்றிணைந்து நடத்த ஒத்துழைத்த அனைவருக்கும் 06▶

# போரில் பாதிப்புற்றோருக்கு பொறுப்புக் கூற வேண்டும்



## இலங்கை அரசுக்கு கனேடியப் பிரதமர் வேண்டுகோள்

றொரண்டோ, மே 20

“போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய நம்பகமான ஒரு பொறுப்புக்கூறும் செயல்முறையை உருவாக்க வேண்டும்” என்று, இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். 06▶

## அரசிலிருந்து விலக நாள் குறியுங்கள்

### மைத்திரி தடாலடி

கொழும்பு, மே 20

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து அமைத்துள்ள கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகும் நாளைத் தீர்மானிக்குமாறு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக்கொண்டுள்ளார். 06▶

## படையினர் மீது ஐ.நா.சபை போர்க்குற்றம் சுமத்தவில்லை!

### மைத்திரி விட்ட புதுக்கதை

கொழும்பு, மே 20

“சில ஊடகங்களும் இனவாத அமைப்புக்களும் தவறாக குறிப்பிடுவதைப் போன்று ஐக்கிய நாடுகள்சபையின் மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் எமது

பாதுகாப்பு படையினர் மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்படவில்லை. மாறாக, வெளிநாடுகளில் வசிக்கும்அரசுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் எதிரான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குச் சார்பானவர்களே இத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்” என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். நாடாளுமன்ற 06▶

## புலனாய்வுக்கு உதவுங்கள்

### இலங்கையிடம் கெஞ்சும் இந்தியா



கொழும்பு, மே 20

புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கு இலங்கையின் உதவியை எதிர்பார்ப்பதாக இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத், தனது பயணத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். 06▶

## சர்வேஸ்வரன் மீது முறைப்பாடு



கொழும்பு, மே 20

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தினத்தில் உயிர்நீத்த உறவுகளை அஞ்சலிப்பதற்காக அனைத்துப் பாடசாலைகளிலும் இலங்கைத் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு 06▶

## முதலமைச்சருக்கு வலை வீசும் முன்னணி

யாழ்ப்பாணம், மே 20

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குமிடையில் இரு வாரங்களுக்கு முன்னர் இரகசிய சந்திப்பொன்று நடந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் ஆகியோர் இதன்போது முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, முதலமைச்சர் உருவாக்க முனையும் கூட்டணியைத் தவிர்த்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் முதலமைச்சர் இணைந்து போட்டியிடலாமென முன்னணியினர் ஆலோசனை கூறியுள்ளனர்.

முதலமைச்சர் உரு 06▶

## அடுத்த ஜனாதிபதி சங்கக்காரவா?



கொழும்பு, மே 20

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவை களமிறக்கத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அன்னம் சின்னத்தில், பொது வேட்பாளராக சங்கக்காரவை களமிறக்க ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச போட்டியிடவுள்ளதாக 06▶

## பொதுமக்களை நினைவேந்துதல் தவறில்லை

கொழும்பு, மே 20

போரில் இறந்த பொது மக்களை நினைவு கூருவதில் தவறில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 06▶



## வவுனியாவில் நேற்று போர் வெற்றி விழா

வவுனியா, மே 20

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவின் நினைவுத் தூபியில் வட மாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரட்ன தலைமையில் இராணுவ வெற்றி நாள் நிகழ்வு நேற்று மதியம் இடம்பெற்றது. 06▶

# ஆயுத மோதலை உருவாக்க மீண்டும் வடக்கில் முயற்சி!

## சொல்கிறார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, மே 20

வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஆயுதக் கலாசாரத்தை உருவாக்கி, அதன் மூலம் அங்கு வாழும் மக்களை இருட்டில் தள்ளும் முயற்சிகளை சிலர் முன்னெடுத்து வருகின்றனர் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

"மே மாதம் 18 ஆம் திகதி எம் அனைவருக்கும் முக்கியமான தினமாகும். இந்தத் தினத்தை எம்மால் மறக்க முடியாது. நாம் யுத்தக் களத்தில் செயற்படாத போதிலும், மக்களுடன் இணைந்து யுத்த வெற்றிக்காகப் பாடுபட்டோம். எமது நாட்டு மக்களுக்கு எந்தவித அச்சமும் இன்றி தைரியமாக நடமாடவும், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவானதும் இந்தத் தினத்திலேயே ஆகும்.

பல இலட்சம் தமிழ் மக்கள் சிறைப் பிடிக்கப்பட்டு ஆயுத முனையில் போருக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள்மீது தீவிரவாதிகள் என்ற முத்திரை பொறிக்கப்பட்டது. வலுக்கட்டாயமாகப் பொதுமக்களை போருக்கு அனுப்பியமை சர்வதேச உடன்படிக்கைக்கு அமையப் போர் குற்றமாகும். அவ்வாறான யுத்தக் குற்றத்தை விடுதலைப் புலிகள் முன்னெடுத்தனர். எனினும், பொது மக்களின் ஜனநாயக உரிமைகளை எமது பாதுகாப்புப் படையினர் பாதுகாத்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தனர். அதனால், விடுதலைப்புலிகளுக்கு ஒப்பாக இராணுவத்தைக் குற்றம் சுமத்த இடமளிக்க முடியாது.

தமிழ் அரசியல் கைதிகள் குறித்து பலர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர் என கூறுகின்றனர். இந்த நாட்டில் ஒரு தமிழ் அரசியல் கைதியேனும் சிறைகளில் இல்லை. 56 விடுதலைப்புலிச் சந்தேக நபர்களே சிறைகளில் உள்ளனர். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அதற்கும் அப்பால் மேலும் 9 பேர் உள்ளனர். மொத்தமாக 65 பேர் உள்ளனர். அவர்கள்மீது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல் பாதுகாப்புத் தரப்பிலும் பலர்மீது வழக்குத் தொடரப்பட்டு சிறையில் உள்ளனர். சிறையில் உள்ள விடுதலைப்புலிக் கைதிகளுக்கு அப்பால் பல்வேறு பயங்கரவாதக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள் எந்தவித தடைகளும் இன்றி நாட்டில் சுதந்திரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இராணுவக் கைதிகளும் சிறையில் உள்ளனர். அவர்கள் எவரோ ஒரு சிலரது கட்டளைக்கு அமைய குற்றம் செய்தவர்கள் ஆவர். " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# சீனப் பிரஜைகள் இருவர் கைது!

கொழும்பு, மே 20

ஒரு தொகை சிகரெட்டுகளைச் சட்டவிரோதமாக சீனாவில் இருந்து கொண்டு வந்த, அந்த நாட்டுப் பிரஜைகள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் இருவரும், நேற்றுக் காலை 5.50 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியபோதே கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் 23 ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் இலங்கையில் இடம்பெறும் சீன அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் பணியாற்றுபவர்கள் என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஆ)



# தங்கத்துடன் இந்தியர் கைது

கொழும்பு, மே 20

26 மில்லியன் ரூபா பெறுமதியான 4 கிலோகிராம் தங்கபிஸ்கட்டுக்களுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து சென்னைக்கு தங்கம் கடத்திச் செல்ல முற்பட்ட போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாக இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக எடுத்துவரப்படும் தங்கத்தின் அளவு அதிகரித்துள்ளது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தவில் வித்துவான் சடலமாக மீட்பு



யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணம், நல்லூர் யமுனா ஏரியில். இருந்து பிரபல தவில் வித்துவானின் சடலம், நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணி வீதியைச் சேர்ந்த இராமையா ஜெயராசா (ஜெயம்) (வயது- 66) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

5 பிள்ளைகளின் தந்தையாரான இவர் கடந்த 17ஆம் திகதி மாலை முதல் காணாமல் போயுள்ளார்.

இந்த நிலையில், குறித்த நபருடைய மனைவி யமுனா ஏரிக்கு தண்ணீர் எடுக்கச் சென்ற வேளை, அந்த ஏரிப் பகுதியில் துர்நாற்றம் வீசியுள்ளது.

இதையடுத்து, பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், ஸ்தலத்துக்கு விரைந்த யாழ்ப்பாணம் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# மே 18 ஆம் திகதியை தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்துக!



கொழும்பு, மே 20

நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் மே மாதம் 18 ஆம் திகதியை தேசிய துக்க தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்த வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார்.

"யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவு கூர்வது தொடர்பில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். இந்த விடயத்தை எதிர்ப்பவர்கள் சற்றுச் சிந்தித்தே செயற்பட வேண்டும். தெற்கில் தற்போது தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையே நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது . இவ்வாறான எதிர்ப்பு கருத்துக்களின் காரணமாக மீண்டும் தெற்கில் இன பிரச்சினைகள் தோற்றம் பெறும். எதிர்ப்பவர்கள் தாம் எதிர்ப்பதற்கான முறையான காரணத்தைப் பொது மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டும்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் இப்போதும் உலகில் பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் அழுத்தங்களின் காரணமாகவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையகம் இலங்கை தொடர்பில் தொடர்ந்தும் போர்க் குற்ற விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. நாட்டில் முற்றாக அழிக்கப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவுகள் எதிர்கால சந்ததியினர் மத்தியில் எதிர் விளைவுகளை தோற்றுவிக்கும் என்ற காரணத்தினாலேயே தென்னிலங்கை அரசியல்வாதிகள் மே 18 தினத்தை எதிர்க்கின்றார்கள். இதில் தேசிய பாதுகாப்பே முதன்மைப்படுத்தபட வேண்டும். இதனை வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் உட்பட அனைத்துத் தமிழ் மக்களும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் 30 வருடகால யுத்தம் தோற்றம் பெறுவதற்கு அந்தக் காலக் கட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கமே காரணம். தமிழ் மக்களை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று லங்கா சமசமாஜ கட்சி எடுத்துரைத்தது. ஆனால், அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தாமல் தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டது. அதன் பெறுபேறே 30 வருட கால கொடிய யுத்தம். நாட்டில் மீண்டும் இது போன்ற யுத்தம் ஏற்பட கூடாது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# ராஜிதவுக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு



கொழும்பு, மே 20

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராகப் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தலைமையிலான குழுவால் இந்த முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் துக்க தினம் அறிவிப்புச் செய்தமை நியாயமானது என அமைச்சரவைத் தீர்மானம் அறிவிக்கும் கடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்தக் குழு, இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளது.

இந்த துக்க தினப் பிரேரணையை முன்வைத்த வட மாகாணசபைச் சேர்ந்த கந்தையா சர்வேஷ்வரனுக்கு எதிராகவும் இதேபோன்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது. (ஆ)

# ருவாண்டாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து



ருவாண்டா நாட்டின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று அங்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன அந்த நாட்டுடானான பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

ருவாண்டா தலைநகர் கிஹாலியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், அந்த நாட்டின் தரப்பில் ஜெனரல் ஜேம்ஸ் கபாரிபே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மின் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, மே 20

2020 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மீள்சக்தி பிறப்பாக்கி மூலம் மொத்த மின் உற்பத்தியை 35 வீதத்தால் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் அமைச்சர் ரஞ்சித் சியம்பளாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் ஜயஸ்ரீ மஹாபோதி புனித ஸ்தலத்தில் நேற்று இடம்பெற்ற விசேட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்தப் மீள் சக்தி பிறப்பாக்கி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மிகவும் பயனுள்ளதாக அமையும்." என்றும் அவர் குறிப்பிட்டார். (ஆ)

எதிரொலி Ethiroli
ஞாயிறு, 20 மே 2018 ethirolimedia@gmail.com

## எல்லாமே சூனியம்!

மனிதப்பேரவலம் ஒன்றை நினைவு கூரும் இடத்தில் இன்னொரு பேரவலத்தை அரங்கேற்றும் "வல்லமை" தமிழர்களுக்கு மாத்திரம்தான் உண்டு என்பதை உலகெங்கும் பறை சாற்றும் வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடந்து முடிந்திருக்கிறது.

பாவம் பல்கலைக்கழக மாணவர்கள். கறுப்பு உடை தரித்து காமெடிப் படைகளாக எழுந்தருளுகிறார்கள். முப்பதாண்டு கால ஆயுதப்போராட்டத்தை நடத்திய புலிகளே காண்பிக்காத வீரத்தை தாங்கள் புதிதாக காண்பித்துவிடப்போவதுபோல நின்று சிரிப்பு காட்டுகிறார்கள். தாமே தமிழர்களின் மீட்பர்கள் போல நினைவேந்தலை வலிந்து தங்கள் கையில் எடுத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஒற்றுமையான நினைவேந்தலுக்கு வரச்சொல்லி அழைப்புக் கொடுத்துவிட்டு, பின்னர் தாங்களே அதை நடத்தப் போவதாக அறிவித்த போதே குழப்பம் ஆரம்பமாகிவிட்டது.

அதன் பின்னர் வடக்கு மாகாணசபை இந்த நிகழ்வைத் தாமே இவ்வளவு காலமும் நடத்தியதால், பல்கலைக்கழக மாணவர்கள் தங்களோடு இணைந்து செய்யலாமென மல்லுக்கட்ட, பெரும் இழுபறிக்குப் பின்னர், மாகாண சபையின் ஏற்பாட்டில் பல்கலைக் கழக மாணவர்களும் உள்வாங்கப்பட்டு நினைவேந்தலை நடத்துவதென முடிவாகியிருந்தது. ஆனால் நினைவேந்தலின் போது, கறுப்புடை தரித்து, படையினர் போல அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் நிகழ்வின் தொடக்கம் முதல் முடிவு வரை தங்களிஷ்டப்படி நடத்தத் தொடங்கினர். முதலமைச்சரைத் தவிர மற்றைய எந்தவொரு அரசியல்வாதியையும் உள்ளே வரவேண்டாம் என்று திமிராகச் சொன்னார்கள். முன்னாள் போராளிகளையும் பலவந்தமாக அப்புறப்படுத்தினார்கள். போதாதென்று நினைவுத்தூபியைச் சுற்றிவளைத்து, அங்கே என்ன நடக்கிறது என்று வந்தவர்களுக்குத் தெரியாதபடி மறைத்துக் கொண்டார்கள்.

இதைப் பார்த்த பலரும் சொன்ன ஒரு விடயம், "அடுத்த முறை மாவீரர் நாளுக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் தான் நடத்த வருவினம். அதுக்கு முதல் மாவீரர் நாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இரண்டுக்கும் பொதுக்கட்டமைப்பு ஒண்டை உருவாக்கி, அதன் மூலம் தான் இதைச் செய்ய வேணும். இப்பிடிக் கூத்தடிக்க இனியும் விடக்கூடாது" என்பதுதான்.

ஒரு நினைவேந்தல் நாளில், ஏதோ வெற்றிக் கொண்டாட்டம் போல மோட்டார் சைக்கிள் பேரணி வந்தது, மாணவர்களின் முதிர்ச்சியின்மையும், நினைவேந்தலின் உணர்வைப் புரிந்து கொள்ளாத் தன்மையையுமே காட்டி நின்றன. புலத்திலிருந்து பல கோஷ்டிகள் இந்த புதிய போர்ப் பரணியைப் பார்த்துக் கண்ணில் ஒற்றிக்கொள்கிறார்கள். விடுதலைப் புலிகளின் அடுத்த படையணி தயார் என்று உள்ளங்கையில் குத்திக்கொள்கிறார்கள். அங்கு பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தியது மோட்டார் சைக்கிள் பேரணி என்றாலும் அதனை இங்கிருந்து குட்டிசிறி மோட்டார் படையணி போல பயபக்தியோடு பார்த்துப் பரவசம் கொள்கிறார்கள். போராட்ட காலத்திலும் அதற்கு பின்னரும் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களது போராட்டப் பங்களிப்புக்களுக்காக வீதி வீதியாக சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டு எறியப்படும்போது இரண்டு கால்களுக்கும் இடையில் கைகளை வைத்துக்கொண்டு நடுங்கிக்கொண்டிருந்த இந்த புலம் பெயர்வாதிகளுக்கு பல்கலைக்கழக மாணவர்களின் தற்போதைய திரட்சி போதையேற்றிவிட்டிருக்கிறது. எப்படியாவது, இவர்களை துருப்புச்சீட்டாக வைத்து தாங்கள் விரும்புகின்ற ஒரு அரசியலை நடத்தி விடவேண்டும் என்று பரபரத்துக்கொண்டு நிற்கிறார்கள்.

காலம் எவ்வளவு வேகமாக சுழன்று வந்து ஒரு சூனியத்தில் குத்திக்கொண்டு நிற்கிறது என்பதை பார்க்கும்போது விரக்தி மட்டுமே எஞ்சுகிறது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# பிரிட்டனில் நினைவேந்தல்

லண்டன், மே 20

பிரிட்டனில் உள்ள புலம்பெயர் அமைப்புகளின் ஏற்பாட்டில், இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வு பிரிட்டன் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் மாலை 4.00 முதல் மாலை 6.30 மணிவரை நடைபெற்றது.

குறித்த நினைவெழுச்சி நிகழ்வில், பிரிட்டன் மற்றும் தமிழீழ த்தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பித்து அதன் பின்னர் அகவணக்கத்துடன் இலங்கை அரசினால் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டது .

கடந்த காலங்களை விட இம்முறை நினைவேந்தலில் அதிகளவான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கடன் பெற்றோரை அச்சுறுத்தும் வங்கி நிர்மலநாதனிடம் குவியும் முறைப்பாடுகள்

மன்னார், மே 20

தாமாக முன்வந்து நுண்கடனுதவியை வழங்கிய வங்கியொன்று அதை மீள செலுத்த முடியாது தத்தளிக்கும் குடும்பங்களை அச்சுறுத்தி வருவதாக மன்னாரைச் சேர்ந்த குடும்பங்கள் பல வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் முறையீடு செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் பகுதில் வங்கி நிறுவனம் ஒன்று வீட்டுக்கு வீடாகச் சென்று நுண் கடன் வழங்கியதால் பல குடும்பங்கள் கடன்களை மீள் செலுத்த முடியாது தவிப்பதாகவும் அத்துடன் வெளி மாவட்டம் ஒன்றில் வழக்கு தாக்கல் செய்வதாக அச்சுறுத்தப்படுவதாக தெரிவித்தே பல குடும்பங்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் முறையீடு செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவது கடந்த ஓரிரு வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் வங்கி நிறுவனம் ஒன்று கிராமங்கள் தோறும் சென்று அங்குள்ள ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று நுண் கடன் திட்டத்தில் கடன்களை வழங்கி அவைகளை மீள்பெற்றும் வந்துள்ளது.

எனினும் கடந்த சில காலமாக மன்னார் மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வரட்சியின் காரணமாகவும் தக்கக் காலத்தில் மழை பொய்த்தமையாலும் விவசாயங்கள் பாதிப்பு அடைந்துளளனர். அத்துடன் கடற்றொழிலும் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது.

இதனால் பல குடும்பங்கள் தாங்கள் விரும்பியோ விரும்பாமலோ நுண் கடன் பெற்றும் பலர் அவற்றை மீள் செலுத்தி வருகின்ற போதும் தொழில் பாதிப்பால் பெற்ற கடன்களை சிலர் மீள் செலுத்த முடியாது திண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் பாதிப்புக்குள்ளாகி வரும் குடும்பங்கள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். அதாவது தாங்கள் பெற்ற கடன் முதலை மீள் செலுத்தியிருக்கின்றபோதும் தொழில் பாதிப்பால் கடனுக்காகன வட்டியை செலுத்துவதில் காலம் தாழ்த்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனினும் கடன் வழங்கிய நிறுவன ஊழியர்கள் தங்கள் வீடுகளுக்கு வந்து தகாத வார்த்தைகளால் திட்டுவதாகவும் பெற்ற கடனில் செலுத்த வேண்டிய பணத்தை மீள் செலுத்தாவிடில் கண்டி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதாக அச்சுறுத்துவதாகவும் பாதிப்புக்குள்ளானவர்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனிடம் புகாரிட்டு வருவதாகவும் அறியமுடிகிறது. (இ)

## இங்கிலாந்து இளவரசரின் கோலாகல திருமணம்

இங்கிலாந்து, மே 20

இங்கிலாந்து இளவரசர் ஹரி, அமெரிக்க நடிகை மேகன் மார்கில் ஆகியோரின் திருமண நிகழ்வு மிகவும் கோலாகலமான முறையில் லண்டனுக்கு மேற்கே பெர்க்ஷயரில் அமைந்து உள்ள புனித ஜார்ஜ் தேவாலயத்தில் நடைபெற்றது.

ஆயிரக் கணக்கானவர்கள் பங்கேற்ற இத்திருமண நிகழ்வு நேற்று இலங்கை நேரப்படி 4.30 மணிக்கு இடம்பெற்றது. கேன்டர்பரி பேராயர் ஜஸ்டின் வெல்பி தலைமையில் திருமணத் திருப்பலி இடம்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட குதிரை வண்டியில் வீதியில் ஊர்வலமாக வின்ட்சார் கோட்டையை அடைந்து திருமண விழா கோலாகலமாக இடம்பெற்றது.

வீதியில் ஊர்வலம் இடம்பெற்றபோது பல்லாயிரக் கணக்கானவர்கள் தேசியக்கொடியை ஏந்தியவாறு இளவரசருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். (இ)



## புதையல் தோண்டிய ஐவர் பிடிபட்டனர்

வவுனியா, மே 20

வவுனியா வாரிக்குட்டியூர் பகுதியில் புதையல் தோண்டிய 5 பேரை நேற்று அதிகாலை 1 மணியளவில் பூவரசங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து புதையல்தோண்டும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாரிக்குட்டியூர், சங்கராபுரம் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் 5 பேரடங்கிய குழுவினர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக, பூவரசங்குளம் பொலிஸாருக்கு இரகசியத்தகவல் ஒன்று கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸ் குழுவினர் புதையல் தோண்டிய 5 பேரையும் சம்பவ இடத்தில் வைத்து கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து மண்வெட்டி, அலவாங்கு என்பனவற்றையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், மே 20

முள்ளிவாய்க்கால் தமிழ் இன அழிப்பு நினைவை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள இரத்தான முகாம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் இன்று காலை 8.30 முதல் மாலை 4மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இரத்ததான நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கி வைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. (இ)

## பள்ளத்தில் பாய்ந்து வான் விபத்து!

பதுளை, மே 20

பதுளை, ஹலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹலிஎல அம்பவகப் பகுதியில், வான் ஒன்று வீதியை விட்டு விலகி, 80 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில், இதில் பயணித்த மூவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு பகுதியில் இருந்து நுவரெலியா, வெலிமடை வழியாக பசறை பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கு வீடு ஒன்றுக்கு சென்று கொண்டிருந்த வானே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளது.

## இன்று நாளும் கோளும்

20.05.2018 ஞாயிற்றுக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 06 ஆம் நாள்

பஞ்சமி மு.ப. 07.01 வரை | ஷஷ்டி மு.ப. 03.37 வரை | குளிகை மு.ப. 03.00-04.30

இராகுகாலம் 04.30- 06.00 | சுபநேரம் காலை 06.30 - 07.30 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சந்தோசம் | பாராட்டு | பரிசு | இன்பம் | துன்பம் | ஆக்கம் | ஆதாயம் | கீர்த்தி | வெற்றி | உதவி | பேராசை | வாழ்வு |

# லசந்த, கீத் நொயர் வழக்குகள்: பின்னணியில் நடப்பது என்ன?

**(17 ஆம் திகதி தொடர்ச்சி)**

லசந்த விக்கிரமதுங்க மற்றும் கீத் நொயர் போன்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு கட்டளை வழங்குவதற்கான உந்துதல் என்ன என ஹெந்த விதாரணவிடம் வினவிய போது, 'பாதிக்கப்பட்டவர்கள் எனக்கு எதிராகவோ அல்லது கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகவோ எந்தவொரு செய்திகளையும் எழுதவில்லை. ஆனால், இராணுவத்துக்கு எதிராக எழுதினார்கள். இராணுவத்தினர் தாக்குதல்களில் ஈடுபட்டால் அதற்கான பொறுப்பை இராணுவத் தளபதியே பொறுப்பேற்க வேண்டும் என்பது வெளிப்படையானது. நான் இராணுவ வீரர்களுக்கு கட்டளைகளை வழங்கவுமில்லை. அதற்கான பொறுப்பை எடுக்கவுமில்லை' எனத் தெரிவித்தார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் இவருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கும் இடையில் சட்ட விவகாரம் தொடர்பான கருத்து வேறுபாடுகள் நிலவின. தற்போது நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் விசாரணை செய்யப்படும் 2006 மிக் உடன்படிக்கை தொடர்பாக லசந்த விக்கிரமதுங்க கோத்தபாய ராஜபக்சவைக் குற்றம் சுமத்தி வெளியிட்ட ஊடக அறிக்கையை எதிர்த்து, கடந்த 2008 ஆம் ஆண்டு கல்கிசை மாவட்ட நீதிமன்றில் கோத்தபாய ராஜபக்சவினால் லசந்த விக்கிரமதுங்க மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட பின்னர், சண்டே லீடர் பத்திரிகையின் உரிமை வேறு தரப்பினரின் கைகளுக்கு மாறியதால் இந்தப் பத்திரிகைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட பத்திரிகை நிர்வாகம், கோத்தபாய ராஜபக்சவிடம் மன்னிப்புக் கோரியதன் பின்னர் இந்த வழக்கு முடிவுக்கு வந்தது.

ஊடகவியலாளர் ஒருவரை அச்சுறுத்தியமை தொடர்பாக கோத்தபாய ராஜபக்ச மீது குற்றம் சுமத்தப்படும் ஒவ்வொரு தடவையும், அவர் அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடமிருந்து வரும் முறைப்பாடுகளே காரணம் எனவும், இராணுவத்தினருக்கு எதிராக ஊடகவியலாளர்கள் செய்தி வெளியிடுவதாக சரத் பொன்சேகா தன்னிடம் முறைப்பாடு செய்யும் போது அதற்கான நடவடிக்கைகளைத் தான் எடுப்பதாகவும், இதுவே தன் மீது


வழிமூலம் : daily mirror
மொழியாக்கம் : நித்தியபாரதி

காப்பு அமைச்சில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்தவாறு கோத்தபாய இதற்கான கட்டளைகளைத் தனது விசுவாசிகளின் ஊடாகவும், பொலிஸ் மற்றும் இராணுவத்தின் சாதாரண கட்டமைப்புக்களின் ஊடாகவும் நிறைவேற்றியதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். இந்த அமைப்புக்களின் ஊடாகவும், முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் ஊடாகவும் ஊடகவியலாளர்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள், கடத்தல்கள் மற்றும் ஏனைய குற்றச் செயற்பாடுகளை ராஜபக்சக்கள் மேற்கொண்டதாக சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஆகியோர் எத்தகைய கட்டளைப் பொறுப்புக்கூறலைக் கொண்டிருந்தனர் என சரத் பொன்சேகாவிடம் வினவிய போது, 'இவர்கள் இருவரும் போர்க் காலத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் தாம் கட்டளைப் பொறுப்புக்கூறலைக் கொண்டிருக்கவில்லை எனக் கூறினால், போர் தம்மால் வெற்றி கொள்ளப்பட்டது என இவர்கள் எவ்வாறு உரிமை கொண்டாட முடியும்?' என கேள்வி எழுப்பினார்.

'2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் லசந்த

குற்றம் சாட்டப்பட்டமைக்கான காரணம் எனவும் கோத்தபாய ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

2007 ஆம் ஆண்டில் அப்போதைய டெய்லி நியூஸ் ஆசிரியருக்கு எதிராக தொலைபேசி மூலம் கோத்தபாய ராஜபக்ச கொலை மிரட்டல் விடுத்ததாகவும், இதன் பின்னர் லேக் ஹவுஸ் பத்திரிகையாளர்களான போத்தல ஜயந்த மற்றும் சனத் பாலசூரிய ஆகியோரை பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்த கோத்தபாய ராஜபக்ச, அவர்களுக்கும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

இறுதியாகக் குறிப்பிட்ட இரு ஊடகவியலாளர்களும் இராணுவத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததாக சரத் பொன்சேகா தன்னிடம் முறைப்பாடு செய்ததாக கோத்தபாய தெரிவித்திருந்தார். இந்தக் குற்றச்சாட்டை சரத் பொன்சேகா ஏற்க மறுத்ததுடன், ஊடகவியலாளர்களுக்கு எதிரான எந்தவொரு தாக்குதல்களிலும் அல்லது அச்சுறுத்தல்களிலும் தான் ஈடுபடவில்லை என உறுதிபடத் தெரிவித்தார்.

'த நேசன்' பத்திரிகையில் 'இராணுவம் என்பது அதனுடைய தளபதியின் தனிப்பட்ட பரிசு அல்ல' என்கின்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையே நொயர் மீது சரத் பொன்சேகா தாக்குதல் மேற்கொள்வதற்கான உந்துவிசையாக இருந்திருக்கலாம் என அண்மையில் 'த ஐலண்ட் நாளிதழில்' குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பான தனது கருத்தை சரத் பொன்சேகா முன்வைத்தார்.

'கீத் நொயர் தனது பத்தியில் குறிப்பிடப்பட்டது போன்று இராணுவம் என்பது அதன் தளபதியின் தனிப்பட்ட பரிசல்ல என்பது உண்மையில் சரியான கருத்தாகும்' என பொன்சேகா குறிப்பிட்டார்.

'கோத்தபாய ராஜபக்சவும் மகிந்த ராஜபக்சவும் இராணுவத்தினரைத் தமது தனிப்பட்ட சொத்தாகவே கருதினர். இதனாலேயே ஊடகவியலாளர்களுடன் முரண்பாட்டை ஏற்படுத்தினர்' என சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

கோத்தபாய ராஜபக்சவால் வாரந்தோறும் நடத்தப்படும் புலனாய்வு ஒன்றுகூடல்களில் கொழும்பிலும் அதற்கு வெளியேயும் இடம்பெறும் புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் பாது

'இராணுவப் புலனாய்வானது நேரடியாக இராணுவத் தளபதியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தாலும் கூட, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய பாதுகாப்பு அமைச்சில் இருந்தவாறு கொழும்பு புலனாய்வு நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமற்ற முறையில் கையாண்டிருந்தார். வெள்ளை வான் கலாசாரம் உட்பட பல்வேறு பயங்கரவாதச் செயற்பாடுகளில் இவர்கள் ஈடுபட்டனர்' என பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

இராணுவ அல்லது புலனாய்வுப் பிரிவின் கட்டளைப் பொறுப்புக்கூறலைத் தன் மீதோ அல்லது தனது தேசிய புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மீதோ சுமத்துவது முட்டாள்தனமானது எனவும் கோத்தபாய ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

'இராணுவத்தில் சிங்கப் படைப்பிரிவு அல்லது கஜபாப் படைப்பிரிவு போன்ற காலாட் படைகளும் மற்றும் பொறியியல் படைப்பிரிவுகளும், வேறு சிறப்புப் படைப் பிரிவுகளும் உள்ளன. இவ்வாறான படைப்பிரிவைப் போன்றதொரு படைப்பிரிவே இராணுவப் புலனாய்வுப் பிரிவாகும்.

இந்த நிலையில், புலனாய்வுப் படைப்பிரிவின் மீது இராணுவக் கட்டளைத் தளபதி எந்தவொரு கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை என எவ்வாறு கூறமுடியும்? அவ்வாறு கூறுபவர்கள் சிங்கப் படைப்பிரிவையும் தாம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை என்று கூறுவார்களா? என கோத்தபாய ராஜபக்ச வினவினார்.

போர்க் காலத்தில் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக பொறுப்பு வகித்த இரு வேறு உயர்மட்ட அதிகாரிகளுக்கு இடையிலான கருத்து முரண்பாடுகளைத் தீர்க்கக்கூடிய விளக்கத்தை வழங்குமாறு இலங்கை இராணுவத்தை அணுகிய போது, 'கொழும்பில் உள்ள இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கான கட்டளைப் பொறுப்புத் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோருக்கிடையிலான விவாதமானது சிக்கல் நிறைந்ததும் சர்ச்சைக்குரிய விவகாரம் எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய மற்றும் அவரது தேசிய பாதுகாப்பு பொறுப்பதிகாரி ஹெந்தவிதாரண

விக்கிரமதுங்க படுகொலை வழக்குத் தொடர்பில் 17 இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு, இந்தப் படுகொலையை மேற்கொள்வதற்கான கட்டளையை நான் வழங்கியதாக அவர்களிடம் பலவந்தமாக பொய்யான வாக்குமூலத்தைப்பெறுவதற்கானமுயற்சிகள்மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முயற்சி பயனளிக்காததால் ஒரு சில மாதங்களின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்' என சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கீத் நொயர் கடத்தப்பட்ட வழக்குத் தொடர்பான எட்டாவது சந்தேக நபராக முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநரான மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர கடந்த மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். கருணாசேகர கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கீத் நொயர் கடத்தப்படுவதற்கான கட்டளையை வழங்கியது முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவா அல்லது இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவா என்பது தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் புலத்வத்தவின் படைப் பிரிவே இந்தக் கடத்தலை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

தனது பதவிக்காலத்தில் எத்தகைய கட்டளைத் தொடர் காணப்பட்டது என்பது தொடர்பாகவும் கோத்தபாயு சுட்டிக்காட்டிய அதேவேளையில், போரின் உச்சக்கட்டத்தில் எத்தகைய உத்தியோகபூர்வமற்ற கட்டளை கட்டமைப்புச் செயற்பாடுகள் மற்றும் பாதாள உலக புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் காணப்பட்டன என்பது தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

கிடைக்கக் கூடிய அனைத்து ஆவணச் சாட்சியங்களிலும் பொன்சேகாவின் பொருள் விளக்கத்தை குற்றப் புலனாய்வுத் துறையினர் பின்பற்ற வேண்டிய நிலை காணப்பட்டதாக ராஜபக்ச குறிப்பிட்டார்.

நொயர் கடத்தப்பட்டு டொம்பேயில் உள்ள பாதுகாப்பான வீட்டில் தடுத்து வைக்கப்பட்ட போது குற்றஞ்சாட்டப்பட்ட கடத்தல்காரர்களுடன் முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் அமல் கருணாசேகர தொலைபேசி மூலம் தொடர்பை மேற்கொண்டிருந்தமையால் இவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

**(தொடரும்)**

# சிங்கப்பூர் உடன்படிக்கையால் அநீதி இழைக்கப்பட மாட்டாது!

## பிரதமர் திட்டவட்டம்



கொழும்பு, மே 20

இலங்கைக்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் எந்தவொரு தொழில்வாண்மையாளருக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தினர், கட்டட நிர்மாண வடிவமைப்பு நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன் போது, கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதும், தவறான கருத்துக்களை நீக்குவதும், இதன் நோக்கமாகும். வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்கு வரவழைப்பது இதன் பிரதான நோக்கமாகும். இலங்கையின் தொழில்வாண்மையாளர்களுக்கு வெளிநாட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும், உள்நாட்டு நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது இதன் இலக்குகளாகும். இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையால் இலங்கையில் உள்ள எந்தவொரு தொழில்துறை சார்ந்தவர்களுக்கும் தொழில் சந்தர்ப்பங்கள் இல்லாமல் போகாது." என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையே செய்து கொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக பல்வேறு தொழில்துறை சார்ந்தோருக்கு இருக்கும் பிரச்சினைகள், சந்தேகங்களை நிவர்த்திசெய்யும் நோக்குடன் தொடர்ந்தும் பேச்சு நடத்துவதற்கு இந்தக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஒப்பந்தம் மற்றும் அதன் இணை ஆவணங்கள் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்துள்ள சரத்துகள் தொடர்பாக அறியத்தருமாறும் அவை தொடர்பாக உண்மை நிலைமையை தெளிவுபடுத்த முடியுமென்றும் உறுதியளிக்கப்பட்டது.

இதேபோன்று ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்காக பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர். இக்கண்காணிப்பின்படி ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்றும் இங்கு குறிப்பிடப்பட்டது. (ஆ)

# பெற்றோலிய தாபனம் நட்டத்தில் !

கொழும்பு, மே 20

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்குவதாகக் கனிய எண்ணெய் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதத்துக்கு 7 ஆயிரம் மில்லியனுக்கும் அதிக நட்டத்தை சுமக்க வேண்டி உள்ளதாக அந்தச் சங்கம் சுட்டிகாட்டியுள்ளது.

பெற்றோல் மற்றும் டீசல் மீது அரசாங்கத்தால் வரி அறவிடப்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஆ)

# டெங்கு நுளம்பு பெருக்கம் வவுனியாவில் அதிகரிப்பு!

வவுனியா, மே 20

வவுனியாவில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக டெங்கு நுளம்புகள் அதிகரித்துள்ளன என்று மாவட்ட பொதுச் சுகாதார மேற்பார்வை பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"வவுனியாவில் அண்மைக் காலமாக மாலை வேளைகளில் பெய்யும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக குருமன்காடு, சூசைப்பிள்ளையார்குளம், வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இது பூச்சியியலாளர்களால் இனம் காணப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் தமது இருப்பிடங்கள், வீடுகள், வியாபார நிலையங்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் துப்பரவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் டெங்கு நுளம்புக் குடம்பிகள் பெருக்கெடுப்பதைத் தடுக்க முடியும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# தமிழர் அச்சமின்றி வாழ இராணுவமே காரணமாம்

## இப்படிக் கூறுகிறார் மகிந்த



கொழும்பு, மே 20

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எந்த விதமான அச்சமும் இன்றித் தமிழ் மக்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தது இராணுவமே என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது, நாடு சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காகப் போரிட்டு வெற்றி வாகை சூடினோம் . இதற்காகச் செய்த உயிர்த் தியாகங்கள் இப்போது காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன

உலகில் மிகவும் ஆபத்தான பயங்கரவாத அமைப்பிடம் இருந்து, எமது நாட்டை மீட்டெடுத்து 9 வருடங்கள் பூர்த்தியாகின்றன. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக நான் பதவி ஏற்ற போது அதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தை முன்னெடுத்திருந்தது. மறுபுறம் எமது உள்நாட்டுப் பிரச்சினைக்காக சர்வதேச தலையீடுகளும் மேலோங்கி இருந்தன. எமது கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதியையும் நிலப்பரப்பில் மூன்றில் ஒன்றுமாகப் பயங்ரவாதிகள் ஆக்கிரமித்திருந்தனர்.

கடல் மற்றும் விமான பிரிவுகளை உள்ளடக்கிய பயங்கரவாத அமைப்பாகவே விடுதலைப்புலிகள் காணப்பட்டனர். அந்தப் பயங்கரவாத அமைப்புக்கு எதிராக உலகில் வேறு எந்தவொரு நாட்டுக்கும் இல்லாத தைரியத்துடன் நாம் போரிட்டோம். இந்தப் போரில் முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினர் என பல்லாயிரம் பேர் உயிர்த் தியாகம் செய்யதனர். இன்னும் பலர் அங்கவீனமாக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பு முழுமையாக அழிக்கப்பட்டதன் பின்னரே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஜனநாயகம் கிடைத்தது. அந்த நிலப்பரப்புக்களில் பயங்கரவாதிகளால் புதைக்கப்பட்ட மிதி வெடிகளை அகற்றிய பின்னரே அந்த மக்களுக்குச் சொந்த மண்ணில் கால் பதிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும், நெடுஞ்சாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகள் என அனைத்து இடங்களிலும் மரண ஓலங்களின்றி சமாதானச் சூழல் கிடைக்கப் பெற்றது. நாட்டுக்கு எதிராகத் துரோகம் செய்பவர்களும் இராணுவத்தினரைக் காட்டிக்கொடுப்பவர்களும் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அதே போன்று தமிழ் இளைஞர் யுவதிகளுக்கும் எமது இராணுவத்தாலேயே சமாதானம் கிடைத்தது . " என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)



## ஆரும் தவறாப் போகப்பிடாது சனத்துக்காகப் பாடுபட வேணும்

மனோகணேசன் தான் ஒரு நடிகன்ரை மகன் எண்டதைக் காட்டிப்போட்டார். நல்லா நடிக்கிறார். இப்ப என்ன திடீரெண்டு பல்டி அடிச்சிருக்கிறார்? செத்தவையளை நினைவு கூரலாம். ஆனால் புலிகளை நினைவு படுத்தேலாதாம். உதென்ன புதுக் கதை. இப்ப அவர் தான் எழும்பி மனுசனா நிக்கிறதுக்கு ஆர் காரணம் எண்டு அவருக்குத் தெரியாதோ? விழுந்தா பாட்டுக்குக் குறி சுடப்பிடாது. குறி சுடப் பழகவும் கூடாது. அது ஒரு எழிய பழக்கம். அதுவும் கன சிங்கள அரசியல்வாதியள் சொல்லியிருக்கினம் தமிழ் ஆக்களின்ரை உணர்வை மதிக்க வேணும். அவையளை முள்ளிவாய்க்கால் நினைவுகளை நினைச்சு விளக்குக் கொளுத்த விடவேணும் எண்டு. இந்த நேரத்திலை இந்தக் கோடாரிக் காம்பு இப்பிடிச் சொல்லுது. பாருங்கோவன்,

நல்லதுக்கோ கெண்டதுக்கோ எண்டு தெரியேல்லை. ஆமிக்காரரும் யூஸ் குடுத்தவை. கிரிக்கெட் ஆட்டக்கார சங்கக்காராவும் உணர்வை மதிக்க வேணும் எண்டு இதைப்பற்றிச் சொல்லீ இருக்கிறார். உலகமே ஒண்டாச் சேந்து இனப்படுகொலை, நடந்தது ஒரு மனித உரிமை மீறல். ஆமியைத் தண்டிக்க வேணும். ஞாயம் கிடைக்க வேணும் தமிழருக்கு எண்டு சொல்லேக்கை எங்களுக்குள்ளையும் அப்பப்ப எதிராமாரிகாலத்துத் தவளை மர்திரிக் கத்திறதுக்கு ஒராள் தேவைதானே! ஆனால் மாரி காலத்துத் தவளை என்ன செய்யும் எண்டால்? கத்திக் கத்திச் சாகும். என்ன?

இப்ப அமைதியாவும் ஒராளை ஒராள் மதிச்சும் மரியாதையோடையும் முள்ளிவாய்க்கால் நினைவைக் கொண்டாடி முடிச்சுப் போட்டம். உதையும் உடைக்கக் கொஞ்சம் வெளிக்கிடும். கவனமா இருக்க வேணும். என்ன? உந்த முறையைத்தான் நாங்கள் ஒவ்வொரு தடவையும் பின்பற்ற வேணும். உதைப் பாத்து உலகம் ஆச்சரியப்படும் என்ன? நீங்கள் ஒண்டை மட்டும் மனதிலை வைச்சிருங்கோ. எதையும் மனச் சுத்தத்தோடை பிழையான பின் புலம் இல்லாமைச் செய்துபாருங்கோ. அதுக்கு ஆண்டவனும் உதவி செய்வர். அதோடை செய்யிறதும் நூற்றுக்கு நூறு சரிவரும்.

உந்த வழியிலை போய் எங்களுக்குத் தேவையான ஒரு நல்ல தலைமையையும் தேட வேணும். தேடினால் கட்டாயம் வரும். இப்ப இருக்கிற சோத்தியள் வாற புது ஆக்களுக்கு கொஞ்சம் வழிவிடவும் வேணும். இவ்வளவு காலமும் சமயத்தையும், சந்தர்ப்பத்தையும் வீணாக்கினது போதும். உங்களாலை முடியாது எண்டு வடிவாத் தெரியுதெல்லே? பிறகு ஏன் கட்சி கட்சி எண்டு கட்சியைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு இருக்க வேணும். பிடியை விடலாம் எல்லே?

தானுந் தின்னான். தள்ளியும் படான் எண்டு ஊரிலை சொல்லுறமாதிரித்தான் கொஞ்சப்பேர் இருக்கினம். எட பட்ட கஷ்டம் போதும். இனிக் கொஞ்சம் எழும்பி மேலை வரலாம் எண்டால், விடாங்கள் போலை கிடக்கு. கஜேந்திர குமாரிலை தான் கொஞ்ச நஞ்ச. நம்பிக்கை வைச்சிருந்தம். அவரும் இப்ப கதைக்கிறது கொஞ்சம் பிசகாக்கிடக்கு. அவரையும் ஆரேன் பின்னாலை நிண்டு தடி விட்டுக்கிண்டுராங்களோ தெரியாது. பெடி பிழை விடாது. என்ன நடந்ததெண்டு தெரியேல்லை. அனுபவக் குறைவாலைதான் அப்பிடிக் கதைக்கிறார் எண்டால், நல்ல ஆக்களோடை சிநேகிதம் வைச்சுக் கதைச்சு ஒரு நல்ல தமிழ் தலைவரா வர அவர் தெண்டிக்க வேணும்.. அவரும் தேப்பன் கண்ட கனவை நனவாக்க வேணும். தன்னை ஆரேன் வேண்டாமல் பாத்துக் கொள்ள வேணும். எல்லாம் சனத்தின்ரை நன்மைக்காகத்தான் இந்த விநாசி அண்ணன் சொல்லுவர். என்ன? விளங்கினால் சரி.

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## போரில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட ஒன்பதாவது ஆண்டு நிறைவைக் கடைப்பிடிக்கிறோம்.

26 ஆண்டுகளாக நீடித்த போரினால், அளவிடமுடியாத காயங்கள், வாழ்க்கை இழப்புகள், இடம்பெயர்வுகளை சந்திக்க நேரிட்டது.

போரில் உயிர் பிழைத்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட தமது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அன்புக்குரியவர்களின் நிலை பற்றிய பதிலுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில், போரினால் தனிப்பட்ட ரீதியில் பாதிக்கப்பட்ட பல தமிழ் கனேடியர்களை நான் சந்தித்திருக்கிறேன்.

அவர்களின் கதைகள், நீடித்த சமாதானத்தையும் உண்மையான நல்லிணக்கத்தையும் அடைவதற்கான தேவையை நினைவூட்டுகின்றன.

போரில் பாதிப்புற்று, உயிர்தப்பியோருக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய நம்பகமான ஒரு பொறுப்புக்கூறும் செயல்முறையை உருவாக்க வேண்டும் என்று, இலங்கை அரசாங்கத்திடம் நான் அழைப்பு விடுகிறேன்.

நல்லிணக்கம், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், அமைதி, மற்றும் நீதியை நோக்கிய நகர்வுகளுக்கான பணிகளை உறுதிப்படுத்துவதற்கும், பொறுப்புக்கூறல், நிலைமாறு கால நீதி, தண்டனையில் இருந்து தப்பிப்பதை முடிவுக்குக் கொண்டு வரும், உள்நாட்டு மற்றும் அனைத்துலக கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் இலங்கை அரசாங்கத்துக்கு கனடா முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

இந்த நாளில், தமிழ்க் கனேடியர்களுக்கும், ஆயுதப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன், எமது நாட்டுக்கு, முக்கியமான பங்களிப்பை வழங்கிய தமிழ்க்கனேடியர்களை அங்கீகரிப்பதற்கும், அவர்கள் கடந்து வந்த துன்பங்களை நினைவு கொள்வதிலும், இணைந்து கொள்ளுமாறு அனைத்துக் கனேடியர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்” என்றும் அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார். (அ)

## சர்வேஸ்வரன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணித்திருந்த வடமாகாண கல்வியமைச்சர் சர்வேஸ்வரனின் செயற்பாட்டுக்கு எதிராக ஶ்ரீலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே இதற்கெதிராக எந்தவித செயற்பாடுகளையும் ஏன் எடுக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, வடமாகாண கல்வியமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் ஶ்ரீலங்கா அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை உண்மையை கண்டறியும் அமைப்பின் இணைப்பாளரான சட்டத்தரணி பிரேமநாத் சீ தோலவத்த நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பதிவு செய்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை முன்னிட்டு உயிர்நீத்த உறவுகளை அஞ்சலிப்பதற்காக வடமாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இலங்கைத் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு வடமாகாண கல்வியமைச்சர் பணிப்புரை விடுத்திருந்தார்.

வடமாகாண கல்வியமைச்சரின் இந்தப் பணிப்புரையானது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கையாக அமைந்திருப்பதாக முறைப்பாட்டாளர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, இறுதிப் போரில் படையினரால் அப்பாவி மக்களும் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக கூறியிருந்தார்.

ஆயுததாரிகள் மட்டுமே பலியான போர் உலகில் எங்கேயும் நடைபெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் இந்தக் கூற்று தென்னிலங்கை அரசியல் களத்தில் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்புட்டு வருகின்றது.

அரச தரப்பிலிருந்தும், எதிர்கட்சியினர் மற்றும் அமைப்புக்களில் இருந்தும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் இதுகுறித்து ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும், ஶ்ரீலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிட்டார்.

வடமாகாண ஆளுநர் என்ன செய்கிறார். வடமாகாணத்தில் பாடசாலைகளில் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுதல், மாணவர்களையும் அஞ்சலி நிகழ்வுகளில் ஈடுபடுத்துதல் மற்றும் விடுதலைப் புலிகளால் பயன்படுத்திய பொருட்களை அருங்காட்சியகத்தில் வைத்து வடமாகாண மக்களுக்காக பார்வையிடுவதற்கான வாய்ப்பை வழங்குதல் போன்றன வடமாகாண கல்வியமைச்சரினால் கூறப்படுகையில் வடமாகாண ஆளுநர் என்ன செய்கிறார்? அவர் அரசாங்கத்தின் பிரதிநிதி.

இந்த அதிகாரங்களை ஆளுநருக்கு வழங்கியிருந்தும் அதில் பிரயோசனம் என்ன? அவற்றை பயன்படுத்தாமல் இருந்து எமது நாட்டின் இறைமையை சேதப்படுத்தும் செயற்பாடுகளுக்கு இடங்கொடுத்தால் என்ன அர்த்தம்? இந்த சூழ்நிலையில்தான் அரசியலமைப்பு திருத்தம் பற்றி பேசுகிறார்கள்.

இருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்துவதில்லை. இப்போது நிறைவேற்று அதிகாரத்தை நீக்கச் சொல்கிறார்கள்.

மத்திய அரசாங்கத்திடம் இருந்து எடுத்து அனைத்து அதிகாரத்தையும் ஆளுநரையும் முதலமைச்சரின் அதிகாரத்துக்குள் கொண்டுவரும்படி கூறுகிறார்கள்.

இப்படி நிலை இருந்தால் வடமாகாண சபை வேறு பாதையில் தான் பயணிக்கும். மத்திய அரசுக்கு இதில் தலையிடுவதற்கான சிறு அதிகாரத்தையும் இல்லாதொழிக்கும் யோசனைதான் தயாரிக்கப்படுகிறது. இதுவே நாட்டின் அழிவு. மக்கள் இதுகுறித்து அவதானத்தை செலுத்த வேண்டும்.

மேலும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறும் அறிவிப்புக்கள் அவரது தனிப்பட்ட கருத்து என்று அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியுள்ளார்.

அமைச்சரவை பேச்சாளரது கருத்து தனிப்பட்டது எனக்கூறும் சந்தர்ப்பம் எந்த நாட்டில் இருக்கிறது? அமைச்சரவை பேச்சாளர் என்பது அரசின் உத்தியோகபூர்வ முடிவுகளை அறிவிப்பவர்.

நாட்டின் ஐக்கியத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் நேரடி சவாலை விடுத்தனர். ஆனால் ஜே.வி.பியினர் அப்படிச் செய்யவில்லை. அமைச்சரவைப் பேச்சாளர் மிகுந்த யோசனையுடன் அரசின் கொள்கையை மக்களுக்கு கூற வேண்டும். ஆனால் தனிப்பட்ட கருத்துக்களை கூறமுடியாது”என மேலும் தெரிவித்தார். (அ)

## நன்றி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் ,

கட்சி பேதமின்றி, பிரதேச பேதமின்றி எங்கள் மக்கள் சகலரையும் உள்ளணைத்து மிகக் குறுகியகாலத்தினுள் இந்த வருட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒழுங்கு செய்து நடத்தியமை எல்லோரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

சில சில குறைபாடுகள் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டன. எனினும் நிகழ்வின் தாற்பர்யம் உணர்ந்தும் எமது மக்கள் பிரதிநிதிகளினதும் மற்றோரினதும் பொறுமை முதிர்ச்சி ஆகியன நிமித்தமும் அவற்றைப் பொருட்படுத்தாமை எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

குறுகிய கால ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வைச் சிறப்புறச் செய்ய உதவிய சகலருக்கும் எமதுநன்றிகள் உரித்தாகுக என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரசிலிருந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தகவலை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வெளியிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் தொடர்பாக தகவல் வெளியிட்டபோதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மையில் கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொண்ட 16 பேர் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், எஞ்சிய 23 உறுப்பினர்களும் விரைவில் இணைந்து கொள்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## படையினர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டரங்கிலுள்ள இராணுவ நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெற்ற தேசிய இராணுவ தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் .

“இராணுவத்தினரையும் தீவிரவாதிகளையும் சிலர் சரியாக இனங்கண்டு கொள்ளாமை கவலைக்குரிய விடயமாகும்.

பணத்தை மட்டுமே நோக்காகக் கொண்ட சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும்கூட இன்று இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான வேறுபாட்டை சரிவரப் புரிந்துகொள்ளமுடியாதுள்ளது.

எமது சிந்தனைகள், தேசத்தின் அடையாளங்கள், மரபுரிமைகள், பண்பாடு என்பவற்றுடன் நாட்டினதும் மக்களினதும் இராணுவத்தினரதும் கௌரவத்தை பேணும் வகையில் சகலரும் செயற்பட வேண்டும்.

தாய் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த வீரம்மிக்க இராணுவத்தினருக்கு என்றும் தேசத்தின் மரியாதை உரித்தானது என்பதுடன், இராணுவத்தினருக்கு வழங்கக்கூடிய உயரிய கௌரவத்தையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலன்புரி தேவைகளை நிறைவேற்றவும் அரசு தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படும்.

சில அரச ஊடகங்களும் இன்று இராணுவத்தினரை கௌரவிக்க மறந்து போயுள்ளதுடன், சில தனியார் ஊடக நிறுவனங்களும் தற்போதைய அரசு இராணுவத்தினரின் நன்மைக்காக மேற்கொள்ளும் செயற்திட்டங்கள் தொடர்பாக கருத்துக்களை வெளியிடாமை கவலைக்குரியதாகும்.

உயிர்த்தியாகம் செய்து தாய் நாட்டுக்காக இராணுவத்தினர் செய்த அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து அவர்களுக்கு கௌரவத்தை வழங்க வேண்டியது சகலரதும் பொறுப்பாகும்.

இராணுவத்தினர் எந்தவொரு ' சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகளின் கைபொம்மைகளாக செயற்படக்கூடாது என்பதுடன், அரசியல்வாதிகள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவோ அதிகாரத்தை பெற்றுள்ள அரசைக் கவிழ்ப்பதற்கோ அல்லது அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கவோ இராணுவத்தினரை உபயோகிக்கக்கூடாது.

மிலேச்சத்தனமான தீவிரவாத போர் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த எண்ணங்கள் இன்னும் முற்றாக இல்லாதொழிக்கப்படவில்லை என்பதுடன், நாட்டிற்கு வெளியே இன்றும் தனியான ஈழ நாடு பற்றிய கனவினைக் கொண்டுள்ள இனவாதிகள் காணப்படுவதுடன் அவர்களது அந்த கனவு நிறைவேற ஒருபோதும் நான் இடமளிக்கப் போவதில்லை.

கடந்த மூன்றரை வருட காலத்தினுள் அரசு எமது நட்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் நாட்டைப் பிளவுபடுத்தும் எண்ணங்களை தோற்கடிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், தொடர்ந்தும் அவ் வாறே செயற்படும்” என்றும் மைத்திரி இதன்போது தெரிவித்தார். (அ)

## புலனாய்வுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுக்களின் போதே, புலனாய்வுப் பிரிவுகளை பலப்படுத்த வேண்டியது, தேசிய மற்றும் பிராந்திய நலன்களுக்கு முக்கியமானது என்றும், இதற்கு இலங்கையின் உதவியை எதிர்பார்ப்பதாகவும், இந்திய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் புலனாய்வுப் பிரிவுகளுக்குப் பயிற்சி அளித்தல், மற்றும் புதிய தொழில்நுட்பங்களை இரண்டு நாடுகளும் பரிமாறிக் கொள்ளுதல் என்பனவும் முக்கியமானது என்றும், அவர் கூறினார்.

அதேவேளை, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத், நேற்று தமது பயணத்தை முடித்துக் கொண்டு புதுடெல்லி சென்றார்.

இந்தப் பயணத்தின் போது அவர் பிரதமர், பாதுகாப்புச் செயலர், முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

மேலும், கண்டியில் உள்ள சமிக்ஞைப் படைப்பிரிவு பாடசாலையில் அமைக்கப்பட்ட தொலைத்தொடர்பு ஆய்வகத்தையும் திறந்து வைத்தார். தியத்தலாவ, காலி, திருகோணமலை படைத்தளங்களையும் சென்று பார்வையிட்டிருந்தார். (அ)

## அடுத்த... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில் கோத்தபாயவுக்கு இணையாக குமார் சங்கக்காரவை களமிறக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

குமார் சங்கக்காரவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் தூதரகங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. அத்துடன் வடக்கு, கிழக்கு உட்பட சிறுபான்மையினரின் வாக்குகளை இலகுவாக சங்கக்கார ஈர்ப்பார் என ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

எனினும் இந்த யோசனை இன்னமும் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ள நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் இந்த திட்டத்துக்கு இணங்கவில்லை என தெரியவந்துள்ளது. கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர். இதேவேளை தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபோது குமார் சங்கக்காரவுக்கு பிரதான நாடொன்றுக்கு வெளிநாட்டு தூதுவர் பதவி வழங்கப்பட்ட போதிலும் அவர் அதனை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொதுமக்களை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று முன்தினம் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“இலங்கையர்களுக்கு மே-18 முக்கியமான ஒரு நாள். போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அமைதியைக் கொண்டு வந்த நாள் மே-18 இல் நினைவு கூரப்படுகிறது.

பாதுகாப்புப் படையினரை இன்று நினைவு கூரும் அதேவேளை, ஆயுதப் போரில் உயிரிழந்த பொது மக்களையும் நாம் நினைவு கூர வேண்டும். அதில் எவ்வித தவறுமில்லை” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(அ)

## வவுனியாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில் கொப்பேகடுவவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதுடன் உயிரிழந்த படையினர், பொதுமக்கள் அனைவருக்காகவும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. வவுனியா தெற்கு உப தவிசாளர் வசந்குமார், உறுப்பினர் சானுரா, தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் துசாரா மற்றும் சகல கட்சி உறுப்பினர்கள் உட்பட பெருமளவானோர் இதில் கலந்துகொண்டனர். (அ)

## முதலமைச்சருக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்க திட்டமிட்டுள்ள கூட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் என்பன இணைந்தால்,சில பாதகங்களை சந்திக்க வேண்டியிருக்கும் எனவும் கூறினர்.

இந்தச் சந்திப்பில் முதலமைச்சர் தரப்பிலிருந்து எந்த தெளிவான பதிலும் கொடுக்கப்படவில்லை எனத் தெரிகின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் முதலமைச்சர் இணைந்து தேர்தலை சந்திக்கும் சூழல் பெருமளவுக்கு சாத்தியமாகி வருகிறது என முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)



## வீரமாதேவியாக சன்னி லியோன்!

மும்பை , மே 20

வடிவுடையான் இயக்கத்தில் நடிகை சன்னி லியோன் நடிப்பில் உருவாகி வரும் 'வீரமாதேவி' படத்தின் படப்பிடிப்பு விறு விறுப்பாக நடந்து வருகின்றது. இந்த நிலையில், படத்தின் முதற்பார்வை போஸ் டர் வெளியாகி வைரலாகி வருகிறது.

வெளிநாட்டில் ஆபாசப் படங்களில் நடித்து வந்த சன்னி லியோன், தற்போது பாலிவுட் படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். மேலும், தமிழில் வீரமாதேவி என்ற படத்திலும் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தை 'பொட்டு' படத்தை இயக்கியுள்ள வடிவுடையான் இயக்குகிறார்.

ஸ்டீவ்ஸ் கார்னர் சார்பில் பொன் சே.ஸ்டீபன் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அம்ரேஷ் கணேஷ் இசையமைக்கிறார். தமிழ், தெலுங்கில் உருவாகும் இந்தப் படத் தைக் கன்னடம், மலையாளம், ஹிந்தி உள் ளிட்ட மொழிகளிலும் மொழிமாற்றம் செய் யப் படக்குழு திட்டமிட்டுள்ளது. (ஆ)





# கியூபாவில் விமான விபத்து: 100 க்கும் மேற்பட்டோர் பலி!

ஹவானா, மே 20

கியூபாவின் ஹவானா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந் துள்ளனர் என்று என்று கியூப அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

கியூபாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஹொல்கூன் நகரத்தை நோக்கி, உள்ளூர் நேரப்படி 12:08 மணியளவில் போயிங் 737 ரக பயணிகள் விமானம் ஒன்று புறப்பட்டது. அதில் 105 பயணிகள் மற்றும் 9 விமானச் சிப்பந்திகள் உட்பட 114 பேர் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமான நிலையத்துக்கு அருகில் விழுந்து நொறுங்கியது. இதையடுத்து, உடனடியாக மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விமானத்தில் பயணம் செய்த 3 பேர் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர். அந்த விமானம் 1979 ஆம் ஆண்டில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இது கடந்த 39 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்தது என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்த விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று பார்வை யிட்ட கியூப ஜனாதிபதி மிகுவல் டயஸ்-கேனெல், "இது ஒரு துரதிர்ஷ்டவசமான விமான விபத்து. " எனக் கூறியுள்ளார் . கடந்த 2010 ஆம் ஆண்டு மத்திய கியூபாவில் நடந்த விமான விபத்தில் 68 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## இந்தியாவில் குறையும் நிலத்தடி நீர்மட்டம்

### நாசா தகவல்


வொஷிங்டன், மே 20

இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது என்று செயற்கைக் கோள்கள் மூலம் நாசா கண்டறிந்துள்ளது.

பூமியின் நிலத்தடி நீர்மட்டத்தை (நன்னீர்) அமெரிக்காவின் 'நாசா' அனுப்பிய செயற்கைக்கோள்கள் மூலம் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். உலக அளவில் 34 மண்டலங்களைச் சுமார் 14 ஆண்டு களாக ஆய்வு செய்த விஞ்ஞானிகள் அதன் முதற்கட்டத் தகவல்களை தற்போது வெளி யிட்டுள்ளனர்.

இதில் பூமியின் ஈரப்பதம் மிகுந்த பகுதி கள் மேலும் ஈரமாகவும், உலர்ந்த பகுதிகள் மேலும் உலர்ந்து கொண்டே போவதாக வும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு மோச மான நீர் மேலாண்மை, பருவநிலை மாற்றம் மற்றும் இயற்கை சுழற்சி உள்ளிட்ட பல காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள், மத்திய கிழக்கு நாடுகள், கலி போர்னியா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருவதாகவும், இதனால் ஏற்க னவே பிரச்சினைகள் உருவாகி இருப்பதா கவும் அந்த ஆய்வு கூறுகிறது. (ஆ)



## கேக்காக மாறிய ஹரி–மெர்க்கல் ஜோடி

லண்டன், மே 20

பிரிட்டன் இளவரசர் ஹரி-மேகன் மெர்க்கல் ஆகியோரின் திருமண நிகழ்ச்சிக்காக லாரா என் பவர் வடிவமைத்த கேக் அனைவ ரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

பிரிட்டன் இளவரசர் ஹரி-மேகன் மெர்க்கல் ஆகியோரின் திருமணம் நேற்று லண்டனில் கோலாகலமாக நடைபெற்றது.

இவர்களின் திருமணத்துக்காக லண்டனைச் சேர்ந்த லாரா மான் சன் என்பவர், திருமணக் கேக் ஒன்றை வடிவமைத்துள்ளார். ஹரி-மேகன் மெர்க்கல் ஆகியோரின் உருவத் தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கேக், பார்வையாளர்களை கவர்ந் துள்ளது. ஐஸ் மற்றும் சொக்லேட் டால் செய்யப்பட்ட இந்த கேக்கை வடிவமைக்க 250 மணித்தியாலங் கள் செலவிடப்பட்டுள்ளது.

இதில் 300 முட்டைகள், 12 கிலோ பட்டர் மற்றும் 15 கிலோ மா என்பன கலக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு பிரேமின் மேல் கேக், சொக்லேட் மற்றும் ஐஸ் வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரேமைத் தவிர அனைத்தையும் உண்ண முடியும் (ஆ)

## ஆப்கானில் தாக்குதல்: 8 பேர் உயிரிழப்பு!

காபூல், மே 20

ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜலாலாபாத் பகுதியில் அமைந்துள்ள கால்பந்தாட்ட மைதானம் ஒன்றில், பயங் கரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுகிறது. நாட்டின் சில பகுதிகளைப் பிடித்து வைத்துள்ள தலிபான்கள், போட்டி அரசு ஒன்றை நடத்தி வருகின்றனர். மேலும், அவ்வப்போது தலிபான்களின் தாக்குதலில் பொதுமக்களும், பொலிஸ் அதிகாரிகளும் உயிரிழக்கும் சம்பவங்களும் தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு ஜலாலாபாத் பகுதியில் உள்ள கால்பந்தாட்ட மைதானத்தில் கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போது, பயங்கரவாதி கள் ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். இதில், 43க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கடந்த வாரம், மாகாணத்தின் பாதுகாப்புக் குறித்த செயற்பாடுகள் மோசமடைந்துள்ளதாகக் கூறி மாகாண ஆளுநர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் தலிபான், ஐ.எஸ். பயங்கரவாத அமைப் புகள் வலுவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# குஜராத்தில் விபத்து: 19 பேர் உயிரிழப்பு!



காந்திநகர், மே 20

குஜராத் மாநிலம் பாவ் நகர் பகுதியில் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 19 பேர் உயிரிழந்துள்ளனர். 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தக் கோரச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த லொறி சிமெந்து ஏற்றிச் சென்ற நிலையில், சிமெந்து மூட்டைகளுக்கு மேல் பலர் அமர்ந்து பயணம் செயதுள்ளனர். பாவல்யாலி பகுதியில் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்த லொறி, வீதியோரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 19 பேர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை குஜராத் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

## சிறைக்குள் மோதல்: 11 பேர் உயிரிழப்பு!

### வெனிசுலாவில் துயரம்

கரகஸ், மே 20

வெனிசுலா நாட்டின் லாரா மாநிலத்தில் உள்ள சிறைச் சாலை ஒன்றில், இரு கோஷ்டிகளுக்கு இடையில் இடம் பெற்ற மோதலில், 11 பேர் உயிரிழந்தனர்.

லாரா மாநிலத்தில் பெனிக்ஸ் சிறைச்சாலை அமைந் துள்ளது. இந்தச் சிறைச்சாலையில் அந்த நாட்டு ஜனாதி பதிக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்ட ஏராளமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், இங்கு நேற்றுமுன்தினம் கைதிகளுக் கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதன்போது, கைதிகள் ஒருவருக்கொருவர் கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

இந்தக் கலவரத்தில் 9 கைதிகள், 2 பொலிஸார் எனப் 11 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பலர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# பிடியெடுப்பால் கண்டனம்

பெங்களூர், மே 20

ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சர்ச்சைக்குரிய பிடியெடுப்பு விவகாரத்தில் பேட்டியளித்த பெங்களூர் வீரர் டிம் சவுதிக்கு ஐ.பி.எல் நிர்வாகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பெங்களூர் மற்றும் ஹைதராபாத் அணிகளுக்கு இடையேயான போட்டியில், ஹைதராபாத் அணி வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் பந்தை தூக்கி அடித்தார். பவுண்டரி எல்லைக்கு அருகே நின்றிருந்த டிம் சவுதி, வேகமாக ஓடி வந்து அந்தப் பந்தைப் பிடித்தார், பந்து கையில் இருந்து தரையில் பட்டதாகத் தெரியவில்லை. அத்துடன் 3 ஆம் நடுவரின்' ரீப் பிளேயில்' பந்து கீழே பட்டது போல் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், நடுவர் ஆட்டமிழப்பில்லை என அறிவித்துவிட்டார், இதனால் டிம் சவுதி உட்பட பெங்களூர் வீரர்கள் அனைவரும் விரக்தியடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, போட்டி முடிந்த பின்னர் டிம் சவுதி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், சர்ச்சைக்குரிய பிடியெடுப்பு குறித்துப் பேசியுள்ளார். இந்நிலையில், சவுதி ஐபிஎல்-லின் நன்னடத்தை விதிமுறையை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை அவரும் ஒப்புக்கொண்டார். எனினும், இது முதல் நிலை வரைமுறைக்குள் வருவதால் கண்டனத்துடன் சவுதி அபராதம் இல்லாமல் தப்பியுள்ளார். (அ)



# ஷரபோவா அரையிறுதியில்!

ரோம், மே 20

இத்தாலி பகிரங்க ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிருக்கான ஆட்டத்தில் ஒஸ்டாபென்கோவை வீழ்த்தி ஷரபோவா அரையிறுதிக்கு முன்னேறினார்.

இத்தாலி பகிரங்க சர்வதேச ரென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்றில் நடப்புச் சாம்பியன் எலினா ஸ்விடோலினா (உக்ரைன்) 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் ஏஞ்சலிக் கெர்பரை (ஜெர்மனி) விரட்டினார்.

முன்னாள் முதல் நிலை வீராங்கனையும், தற்போது தர வரிசையில் 40 ஆவது இடம் வகிப்பவருமான ரஷ்யாவின் மரிய ஷரபோவா, 6 ஆம் நிலை வீராங்கனையும், பிரெஞ்ச் ஓபன் சம்பியனுமான ஒஸ்டாபென்கோவை (லாத்வியா) எதிர்கொண்டார். 3 மணித்தியாலம் 13 நிமிடம் நீடித்த பரபரப்பான இந்த மோதலில் ஷரபோவா 6-7 (6-8), 6-4, 7-5 என்ற செற் கணக்கில் ஒஸ்டாபென்கோவை சாய்த்து அரையிறுதிக்கு முன்னேறினார். இந்த ஆண்டில் ஷரபோவா முதல் 10 இடங்களுக்குள் உள்ள வீராங்கனை ஒருவரை வீழ்த்துவது இதுவே முதல் முறையாகும்.(அ)

# கடைசிக் கணங்கள்

ஸ்பெய்ன், மே 20

பார்சிலோனா அணியின் வெற்றியில் பெரும் பங்களிப்புச் செய்த ஸ்பெய்ன் நட்சத்திரம், அணித் தலைவர் இனியெஸ்டாவுக்கு அந்தக் கழகம் விமரிசையான பிரியாவிடை அளித்தது.

34 வயதான இனியெஸ்டா பார்சிலோனாவுடன் தன் 12 ஆவது வயதில் இணைந்தார். சேர்ந்த புதிதில் இளையோர் லீக்குகளிலும், 'பி' அணியிலும் ஆடினார். பிறகு 2002-ல் பெருமைக்குரிய பிரதான அணியில் இணைந்தார்.

கடந்த வெள்ளியன்று கேம்ப் நூவில் நடந்த மிகப்பெரிய பிரியாவிடை நிகழ்வில் பார்சிலோனா அணியின் அனைத்து வீரர்கள், இனியெஸ்டாவின் குடும்பம், முன்னாள் சக வீரர்கள் சாமுவேல் ஈட்டோ, சாவி ஹெர்னாண்டஸ், உலகத்தரம் வாய்ந்த பிற விளையாட்டு வீரர்கள், அமெரிக்கக் கூடைப்பந்து என்பிஏ நட்சத்திரங்கள் பாவ் மற்றும் மார்க் கேசோல் ஆகியோர் 300 பேர் கலந்து கொண்டனர்.

பார்சிலோனா அணி இனியெஸ்டாவுடன் வென்ற 32 வெற்றிக்கிண்ணங்களும் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டன.

2017-18 லா லீகா மற்றும் கோபா டெல் ரே கிண்ணங்களையும், இனியெஸ்டா தலைமையில் பார்சிலோனா வென்றுள்ளது,

"இந்த இறுதி மணி நேரம் எளிதில் கடக்க முடியாத ஒன்றாக உள்ளது, இதனை ஏற்க முடியவில்லை.

பார்சிலோனாவை விட்டுச் செல்லும் நாள் வரும் என்பதை நினைத்துப் பார்க்காமலேயே வாழ்ந்துள்ளதால் இந்தத் தருணம் எனக்கு மிகவும் கடினமாக உள்ளது" என்றார் இனியெஸ்டா. (அ)

# அப்போ 'ஹீரோ' இப்போ 'ஸீரோ'

லண்டன், மே 20

ஐ.பி.எல் தொடரின் கடந்த வருடத்தில் மிகவும் ஆதிக்கம் செலுத்திய வீரர் என்ற விருதைப் பெற்ற பென் ஸ்டோக்ஸ், இந்த வருடம்ஏமாற்றத்துடன் சொந்த நாடு திரும் பியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் கடந்த வருடத்தில் இருந்து, ஐ.பி.எல் தொடரில் இடம்பிடித்து விளையாடி வருகிறார். சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் கடந்த இரண்டு வருடங்களாக விளையாடவில்லை. அந்த இரண்டு அணிகளுக்குப் பதிலாக ரைசிங் புனே சூப்பர்ஜெயன்ட்ஸ், குஜராத் லயன்ஸ் அணிகள் பங்கேற்றன.

கடந்த வருடம் ரைசிங் புனே சூப்பர்ஜெய்ன்ட் பென் ஸ்டோக்ஸை 14.5 கோடி ரூபா கொடுத்து ஏலத்தில் எடுத்தது.

அறிமுகப் போட்டிகளில் பென் ஸ்டோக்ஸ் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 12 போட்டிகளில் விளையாடி 1 சதம், ஒரு அரைச்சதத்துடன் 316 ஓட்டங்கள் அடித்தார். அத்துடன் 12 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். இவரது சிறப்பான ஆட்டத்தால் புனே அணி இறுதிப் போட்டிக்கும் முன்னேறியது.இதனால் பென் ஸ்டோக்ஸ் அறிமுகத் தொடரிலேயே மிகவும் ஆதிக்கம் செலுத்திய வீரர் என்ற விருதைப் பெற்றார்.

இந்த வருடம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, 12.5 கோடி ரூபா கொடுத்து பென் ஸ்டோக்ஸை ஏலம் எடுத்தது ஆனால் இந்த வருடம், 13 போட்டிகளில் விளையாடி 196 ஓட்டங்கள்



மட்டுமே எடுத்துள்ளார். அத்துடன் 8 விக்கெட்டுக்களை மட்டுமே கைப்பற்றினார். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வெற்றிக்கு இவரால் பெரிய அளவில் உதவி செய்ய முடியாமல் போனது. போனமுறை ஹீரோவாக இருந்த பென் ஸ்டோக்ஸ் இம்முறை 'ஸீரோ' ஆகிப் போயுள்ளார். (அ)

# அடேய்ப்பா, இவ்வளவு சொத்தா?

கொழும்பு, மே 20

இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவரான மஹேல ஜெயவர்த்தனேவின் சொத்து மதிப்பு 4 மில்லியன் டொலர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹேல 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 அம் திகதி இலங்கை- இந்தியா இடையே கொழும்பில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதன்முறையாகக் களமிறங்கினார்.


தனது சிறப்பான ஆட்டத்தின் காரணமாக அதிக விருதுகளை இவர் பெற்றுள்ளார். குறிப்பாக 2006 ஆம் ஆண்டில் சிறந்த அணித்தலைவர் விருது ஐ.சி.சியால் வழங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டில் விஸ்டன் கிரிக்கெட்டர், 2013 ஆம் ஆண்டில் ஐசிசி ஸ்பிரிட் விருது என்பன இவருக்கு வழங்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார்.

2012 ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரில் டெல்லி அணி சார்பில் 1.4 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார்.

மீண்டும் 2015 ஆம் ஆண்டு 1.5 மில்லியன் டொலர் தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டு ஐபிஎல் ஏலத்தில் இவர் எடுக்கப்படவில்லை. இவரது வருமானம் மற்றும் தனிப்பட்ட தொழில்கள் மூலம் இவரது சொத்து மதிப்பு கணக்கிடப்பட்டுள்ளது. இவர் கொழும்பில் உணவகம் ஒன்றை நடத்தி வருகிறார்.

அதுமட்டுமின்றி, மஹேல அதிக நிறுவனங்களின் விளம்பரத்தூதுவராக இருந்துள்ளார். இதனடிப்படையிலேயே அவரது சொத்து 400 மில்லியன் டொலருக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.(அ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 20.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.